# ரீமஸின் ஜெபமும் – ஆசீர்வாதமும்

## ஹலோ குட்டீஸ் நல்லா இருக்கீங்களா?

ஒரு மலைக்கிராமத்தில் பல ஏழைக் குடும்பங்கள் இருந்தன. ஆடு, மாடு, கோழி வளர்த்து, அவரவர் நிலத்தை உழுது பயிரிட்டு வரும் வருமானத்தை வைத்து அவர்கள் வாழ்க்கையை ஓட்டினார்கள். அங்குள்ள குழந்தைகளுக்கு படிப்பு வசதி கிடையாது. ஒருத்தர், இரண்டு பேருக்கு மட்டுமே எழுதப் படிக்கத் தெரிந்திருந்தது. இந்த கிராமத்தில் பக்தியுள்ள பெற்றோருக்கு ரீமஸ் என்னும் ஒரு பையன் இருந்தான். அவனுக்கு 8 வயதாயிருக்கும் போது தனக்கு எழுதப்படிக்கத் தெரியவில்லையே என்ற ஏக்கம் வந்தது. ஒரு நாள் அங்குள்ள கடைத் தெருவில் ஒருவர் செய்தித்தாளை வாசிப்பதை ரீமஸ் பார்த்தான். அவரிடம் அவன் மெல்லச் சென்று தனக்கு எழுதப்படிக்க கற்றுத் தரும்படி கேட்டான். அந்த மனிதரோ நான் உனக்குச் சொல்லித் தருகிறேன். ஆனால் அதற்குப் பதிலாக நீ என்னுடைய மாடுகளை கொஞ்ச நாட்கள் மேய்க்க வேண்டும் என்றார். அப்படியே ரீமஸ் காலையில் 3 மணி நேரம் மாடுகளை மேய்த்து விட்டு, வீட்டில் மதிய உணவு உண்டபின் வந்து, இருட்டும் வரை அந்த மனிதரிடம் படிப்பு கற்று வந்தான்.

பென்சிலோ, காகிதமோ இல்லாததால் பெரும்பாலும் மணல் தரையில் கைவிரலால் எழுதியே பழகி, எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டான். சொல்லிக் கொடுத்த அந்த மனிதர், அவனுக்கு ஒரு சிறு பென்சிலும், கசங்கிய காகிதத்துண்டு ஒன்றும் பரிசாக அளித்தார். மேலும் ஏழைப்பிள்ளைகள் பட்டணத்தில் படிக்க வசதி செய்து தரப்படும், அதற்கு மனு அனுப்பினால் வழி கிடைக்கும் என்று அந்த மனிதர் கூறியிருந்தார். அவர் கொடுத்த பரிசை ரீமஸ் பெட்டியில் பத்திரமாக வைத்து கொண்டான். ரீமஸின் தந்தை ஒரு நோயாளி, படுத்த படுக்கையாக இருந்தார். தாயாரோ மலைச் சரிவுகளில் வளரும் நாணல் செடிகளைப் பறித்து வந்து அதை சுத்தம் செய்து தொப்பிகளைச் செய்வார். அங்குள்ள ஒரு சிறு தொழிற்சாலைக்கு ஒரு லாரி பொருட்களை ஏற்றிக் கொண்டு வரும். அந்த லாரி டிரைவர் அவன் அம்மாவுக்கு பழக்கமானவர். எனவே அவர்கள் அந்த தொப்பிகளை அவரிடம் கொடுத்து விற்று வருமாறு சொல்வார்கள். அதில் கிடைக்கும் பணத்தை வைத்து வீட்டிற்கு வேண்டியவைகளை வாங்குவார்கள். ரீமஸோ அவர்களுடைய ஆடு, மாடு, கோழிகளை கவனித்து வந்தான். ஒருநாள் ரீமஸ்-க்கு திடீரென்று ஒரு யோசனை வந்தது. உடனே அவன் பெட்டியில் ஒளித்து வைத்திருந்த பேப்பரையும், பென்சிலையும் எடுத்து முழங்காற்படியிட்டு ஜெபித்தான். அவன் அம்மா அப்பா எதற்கெடுத்தாலும் ஜெபிப்பதை அவன் பார்த்திருந்தான். அதனால் மறுபடியும் ஊக்கமாக ஜெபித்தான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் வந்தது. பிறகு அந்த பேப்பரில் இப்படி எழுதினான். இதை கண்டெடுக்கிறவர்கள்



தயவுசெய்து ஏழைப் பிள்ளைகள் படிக்கும் பள்ளியில் என்னைச் சேர்க்க முயற்சி செய்யுங்கள். நான் ரொம்ப ஏழை. ஆனால் கடவுளை அதிகம் நேசிக்கிறேன். அவரிடம் கெஞ்சி கேட்டு விட்டுத்தான் இதை எழுதுகிறேன்.ஸ்டாம்ப் வாங்க கூட காசு இல்லை. அதனால இந்த தொப்பிக்குள் வைக்கிறேன். எவர் கையிலாவது கிடைத்தால் தயவு செய்து உதவி செய்யும்படி தாழ்மையோடு கேட்கிறேன். இப்படிக்கு ஏழை ரீமஸ் என்று எழுதி அதை சட்டை பைக்குள் வைத்துக் கொண்டான்.

மறுநாள் அம்மா தொப்பி செய்து கொண்டிருந்த போது அம்மாவுக்கு தெரியமால் ஒரு தொப்பிக்குள் அதை வைத்து விட்டான். வழக்கம் போல லாரி டிரைவரிடம் தொப்பிகளைக் கொடுத்தனர். 2 வாரம் ரீமஸ் பதில் வருமா? வராதா என எதிர்பார்த்தான். பின்பு அதையே மறந்து விட்டான். 3 மாதம் கழித்து இவங்க வீட்டிற்கு முன் லாரி நின்றது. லாரி டிரைவர் ரீமஸிடம் ஒரு பெட்டியை நீட்டினார். அதோடு ஒரு கடிதத்தையும் கொடுத்தார்.

பிரியமுள்ள ரீமஸ்-க்கு உன் கடிதத்தை என் தொப்பிக்குள் பார்த்தேன். முகவரி இல்லாததால் தொப்பி விற்ற கடைக்குச் சென்று லாரி டிரைவர் மூலம் உன் இருப்பிடம் அறிந்தேன். நீ படிக்க நான் வசதி செய்கிறேன். இதோ சில துணிமணிகளை அனுப்புகிறேன். இதை அணிந்து கொண்டு லாரியில் ஏறி இங்கு வந்து சேர்வாய் என எதிர்பார்க்கும் வில்லியம்ஸ் என்று எழுதியிருந்தது. இதை வாசித்தவுடன் அம்மா அப்பாவிடம் காண்பித்தான். அவர்கள் ஆச்சரியமும், ஆனந்தமும் அடைந்தார்கள். பக்தியுள்ள பெற்றோர் மகனின் நன்மைக்காக அவனை அந்த லாரி டிரைவருடன் அனுப்பி வைத்தார்கள். ரீமஸ் நன்றாக படித்து, நல்ல பெயரை எடுத்தான், ஆண்டவரின் வழியில் நடந்தான்.

ஆப்பிரிக்கா சென்ற மிஷனரிகளில் ரீமஸ் ஒருவர்.

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா படிக்க வசதி இருந்தும் படிப்பில் நான் கவனம் செலுத்தாததை மன்னியுங்க. நான் தூக்கியெறியும் சிறு பென்சிலையும், கசங்கிய காகிதத் துண்டையும் கூட ஜெபம் பண்ணி பயன்படுத்திய ரீமஸைப் போல நானும் எனக்கு கிடைத்திருக்கும் பொருட்களை வீணாக்காமல், இல்லாதவற்றிற்காக முறுமுறுக்காமல் நன்கு படித்து தேவனே உமக்கும், பெற்றோருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்க உதவி செய்யுங்க ஆமென்.

## மனப்பாட வசனம்

திக்கற்றவர்களுடைய ஜெபத்தை அலட்சியம் பண்ணாமல்
அவர்கள் விண்ணப்பத்தை அங்கீகரிப்பார்.
சங் 102:16